**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**
**அ.வ.எண்.43/2023**

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு ஜனவரி மாதம் 27 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : புவனேஷ்வரி | மதம் | : இந்து |
| த/பெ | : பழனி | ஜாதி | : -- |
| வயது | : 58 | கிராமம் | : -- |
| தொழில் : | இல்லத்தரசி | வட்டம் | : சென்னை |

**27.01.2026**
**வா.சா. 1 ன் முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கில் 2ம் வாதி ஆவேன். வாதி தரப்பு 1ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தை நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். என் தாயார் ஜெயா அவர்களின் இறப்பு சான்று இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(இறப்பு சான்று வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** என் தாயார் ஜெயா அவர்களின் வாரிசு சான்று தாக்கல் செய்கிறேன். **(வாரிசு சான்று வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

2. 09.05.2023ம் தேதியிட்டு நான் திருத்தணி காவல் நிலையத்தில் கொடுத்த புகாருக்கு கொடுக்கப்பட்ட மனு ரசீது தாக்கல் செய்கிறேன். **(மனு ரசீது வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** என் தாயாரின் குடும்ப புகைப்படம் தாக்கல் செய்கிறேன். **(குடும்ப புகைப்படம் வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

(முதல் விசாரணை தொடர்ச்சி ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)